★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE:

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 29உ திங்கள் (11—6—56) ★ ★ வெளியூர்: வைகாசி 30உ செவ்வாய் (12—6—56) [இதழ் 307

அகிம்சா வீரர்கள் ஆட்சியில்!

"கடந்த 1919-ம் ஆண்டு, ஆஸ்திரியாவில் ஆயுதந் தாங்கிய கூட்டமொன்று போலீஸ்காரர்களைக் கொன்ற பொழுதுகூட, ஆஸ்திரியப்போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில்லை.

"நிராயுதபாணிகளின் மீது 'அகிம்சை' பேசுகிற இந்திய சர்க்கார், இதுவரை 100 தடவை துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருக்கிறது. இதில் சுடுபட்டு மடிந்தோரின் தொகை 1,500 என்பது எனது கணக்கு!"

—டாக்டர் லோகியா

'தட்சிணப் பிரதேசம் கோருவோர் தந்திரசாலிகள்!'

'ஒரு இராஜ்யத்தின் மதிப்பு-மரியாதை அதன் அளவைப் பொறுத்தில்லை'

'ஆந்திரமும், கேரளமும் இணைந்திருந்த சென்னைக்கு டில்லியில் ஆதரவு இருந்ததா?'

'மூன்று கோடி தமிழர்களும் ஒற்றுமையுடனிருந்தால் அச்சங்கொள்ளத் தேவையே இல்லை'

'இங்கோ அங்கோ அமைச்சர் பதவி தேடுகிறவர் தவிர வேறு எவரும் எதற்கும் பயப்படத் தேவையில்லை'

முதலமைச்சர் காமராசர் தரும் தகவல்

திருச்சி, ஜூன் 10—

"சிறு மாநிலத்தை வைத்திருப்பதில் தவறு எதுவும் கிடையாது; அதனால் எவ்வித நன்மைக்கேடும் கிடையாது. 3 கோடி மக்களைக் கொண்ட தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், அந்த மக்களிடையே ஒற்றுமை குன்றாதிருக்கும் காலம்வரை யாரும் எதற்காகவும் அஞ்சத் தேவையில்லை. இங்கேயோ அல்லது டெல்லியிலேயோ ஒரு மந்திரி பதவி வேண்டுமே என்பதற்காக மட்டும் தவிர வேறு எதற்கும் பயப்படத் தேவையில்லை."

—இவ்வாறு, சென்னை முதலமைச்சர் காமராசர் அவர்கள் திருச்சிக்கு அருகிலுள்ள மணச்சநல்லூரில் நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரு மாநிலத்திற்குக் கிடைக்கிற மதிப்பும், உதவியும் அதனுடைய பரப்பு அளவைப் பொறுத்தது என்ற கருத்தை மறுத்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சென்னை போன்ற சிறுமாநகரங்கள் டெல்லியில் எந்தவிதமான அதிகாரமும் செய்யமுடியாது என்று கூறுகின்றனர்; ஆனால், சென்னை மாநிலம், முன்னால் ஆந்திரமும்—கேரளமும் இணைக்கப்பட்டிருந்த போதாவது அதுபோன்ற ஏதாவது மதிப்புக் கொண்டிருந்ததா என்று கேட்க விரும்புகிறேன்."

அகாலி தளத்தை உருக்குலைக்க காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் சதி

அந்தச் சதியில் சிக்கி அகாலிய தளம் சிதைந்து போகாமல் சீக்கியர் பார்த்துக்கொள்வர்

மாஸ்டர் தாரா சிங் முழக்கம்

அமிர்தசரஸ்—

பெப்சுவின் முன்னாள் முதல் அமைச்சரான சர்தார் கியான்சிங் ரேர்வாலா, சிரோமணி அகாலி தளத்தையே காங்கிரஸ் கோட்டைக்குள் கொண்டுவரச் செய்யும் முறையில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் விளைவு பற்றி சிரோமணி அகாலிதளத் தலைவர் மாஸ்டர் தாரா சிங் குறிப்பிட்டிருப்பதாவது:—

"சிரோமணி அகாலிதளத்தவரின் முழுமனதுடன்கூடிய ஆதரவால் அகாலிதளத்தின் தீர்மானத்தின்படி சர்தார் ரேர்வாலா பெப்சு சட்டசபைக்கு உறுப்பினராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் எல்லா வகையாலும் ஒரு அகாலிதள உறுப்பினரே ஆவார். தன்னுடைய தலைமையின் கீழ் சீக்கியரல்லாத உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அமைப்பை நிறுவிக் கொள்ள அவர் ஒரு 'தேசிய முன்னணி' உறுப்பினராவதற்கு அனுமதி தரப்பட்டது உண்மைதான். அவர் அம்முறையிலேதான் நடத்தப்பட்டார் — அவரும் அதுபோலவே நடந்துகொண்டார். ஆனால் அப்படிப்பட்ட நிலையிலிருந்த அவர், ஒரு அடிப்படைக் கொள்கை விஷயத்தில் என்னையோ அல்லது மற்ற அகாலி தலைவர்களையோ கலக்காமல் பத்திரிகைகளுக்கு அறிவிக்க முற்பட்டது மிக வருத்தத்தக்க செயலாகும். அதனை அவர் உணர்ந்திருக்க வேண்டும்.

"பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கும்போது, அகாலி தளத்தை உருக்குலைத்துவிடுவதற்குச் சில உயர்ந்த காங்கிரஸ் அதிகாரிகளுடன் திட்டமிட்டுவருவதாகத் தெரிகிறது. இத்தகைய் தீயச் செயல்கள் நிச்சயம் தோல்வியே அடையும்; இத்தகைய எதிர்ப்புச் சக்திகளினின்றும் அகாலிதளம் இரட்டிப்புப் பலத்துடன் விடுவித்துக்கொள்ளும்.

"இந்தப் பிரச்சினையில் இப்போதைக்கு இதைத் தவிர வேறு எதுவும் நான் கூற விரும்பவில்லை. நிலைமைகளை ஆராய 17-ம் தேதி செயற்குழு கூடவிருக்கிறது," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

வளரும்வடக்கிற்கு இன்னொருசான்று

எஃகுவார்ப்பட உறுப்புகள் சித்தரஞ்சனில் தயாரிக்க முடிவு

புதுடில்லி ஜூன் 6—

உற்பத்தி திறனனைத்தை நிறையப் பெற்று வடக்கு வளர்கிறது—தெற்கு தேய்கிறது என்று நாம் சுட்டிக் காட்டுவதற்கேற்றாற்போல், மற்றுமொரு எஃகு வார்ப்பட தொழிற்சாலையை வடக்கிலேயே நிறுவ மத்திய ஆட்சிபீடம் முடிவு செய்துள்ளது!

இரயில் எஞ்சின்களின் எஃகு வார்ப்பட உறுப்புகளைத் தயாரிக்கும் பொருட்டு சித்தரஞ்சன் இரயில் எஞ்சின் தொழிற்சாலையில் ஒரு எஃகுவார்ப்பட பிரிவை துவக்குவதென இந்தியப் பேரரசு தீர்மானித்துள்ளது. இதற்கு வேண்டிய எஃகு உறுப்புகள் தற்போது அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. இந்த வார்ப்படத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு இந்திய அரசினர், அமெரிக்காவிலுள்ள பல 'எஞ்சினீயரிங் கம்பெனி'களிடம் தகவல் கேட்டுள்ளனராம்.

சர்வதேச நிர்வாகத்தின் கீழ் உலக நாடுகள்?

சுதந்திரத்தைக் காக்க உலகப் போர்ப் படை தேவையாம்

வி. வி. கிரியின் ஆசை

பெங்களூர், ஜூன் 10—

"மொழிவழியின் அடிப்படையில் மாநிலங்களை அமைப்பதென்பது வெறும் கேலிக்கூத்தேயாகும். இந்தியா முழுவதும் ஒரு ஆட்சியின் கீழ் வரக்கூடிய காலம் ஒன்று வருமென்றே நான் நினைக்கிறேன்"

என்று, ஆர். எம். எஸ். தொழிலாளர் சங்கக் கிளை ஒன்றைத் துவக்கி வைத்துப் பேசுகையில், வி. வி. கிரி கூறியுள்ளார்.

"இந்தியா முழுவதும் ஒரு நிர்வாகத்தின்கீழ் உள்ளபோது உலகத்திற்கும் ஒரு சர்வதேச நிர்வாகம் இருக்கவேண்டும். இது போன்ற சர்வதேச நாடு தோன்றினால், உலகிலுள்ள மக்கள் எண்ணிக்கையை நியாயமான முறையில் எல்லா நாடுகளுக்கும் பகிர்ந்து கொள்வது இயலுவதாக இருக்கும்

"இந்த சர்வதேச நிர்வாகத்திலுள்ள ஒவ்வொரு தேசமும் சுதந்திர நாடாகத் திகழும். இந்த நாடுகளில் சட்டம், அமைதியைக் காப்பதற்கென சாதாரண போலீஸ் படை மட்டுமேதான் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாட்டின் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கென சர்வதேச நிர்வாகம், ஒரு உலகப் போர்ப் படையை வைத்திருக்கவேண்டும்," என்றும் அவர் கூறியுள்ளார்.

****

விநோபா-அண்ணா சந்திப்பு

★

10—6—56 பிற்பகல் 4-மணிக்கு, காஞ்சீபுரத்துக்குப் பக்கத்தில் உள்ள தம்மனூர் என்ற சிற்றூரில், விநோபா—அண்ணா சந்திப்பு நடைபெற்றது.

விநோபாவுடன் அண்ணா ஒரு மணிநேர அளவு தங்கி இருந்தார்

பல்வேறு பிரச்சினைகள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

திராவிட நாடு பிரச்சினைபற்றி விநோபா ஆவலுடன், பல தகவல்களைக் கேட்டு அறிந்து கொண்டார். பூதானத்துக்கு தி. மு. கழகத்தின் ஆதரவுபெற வேண்டுமென்று தாம் பெரிதும் விரும்புவதாக விநோபா தெரிவித்தார்.

ஏற்கனவே, தனிப்பட்ட முறையில், தி. மு. க. தோழர்கள் பல்வேறு இடங்களில், பூதானத்துக்கு ஆதரவு அளிப்பதுபற்றி மகிழ்ச்சி தெரிவித்தார்.

அதே முறையிலே மேலும் ஆதரவு கிடைக்கும் என்று அண்ணா உறுதி அளித்ததுடன், தி. மு. கழகம் கட்சி அடிப்படையில் பூதான இயக்கத்தில் கலந்து கொள்வதிலே ஏற்படக்கூடிய சிக்கல்களையும், சங்கடங்களையும் அண்ணா அவர்கள் எடுத்துரைத்தார்.

மீண்டும் ஒரு திங்களில் அண்ணா அவர்கள் விநோபா பாவேயைச் சந்திப்பதாகக் கூறி விடை பெற்றுக் கொண்டார்.

****

'வரதட்சிணை முறையை சட்டத்தால் மட்டுமே ஒழித்துவிட முடியாது'

'இளைஞர்களே முன்வந்து புதியதோர் நிலையை உருவாக்க வேண்டும்'

முன்னாள் கவர்னரின் 'அற்புதமான' யோசனை!

பம்பாய், ஜூன் 10—

'வரதட்சிணை' முறையை ஒழிப்பதற்கென இளைஞர்கள் முன்வந்து, ஒரு அமைப்பையே ஆரம்பிக்கவேண்டும்—என்று, திருமதி லீலாவதி முன்ஷி என்ற மக்கள் சபை உறுப்பினர் கருத்தறிவித்திருக்கிறார்.

'வரதட்சிணை முறை ஒழிப்பு வார'த்தை யொட்டி, இங்கு, 'கன்யா குப்ஜா நவ சமாஜ்' என்னும் அமைப்பினரால் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் பேசுகையில், அம்மையார் மேற்கண்டவாறு குறிப்பிட்டுவிட்டு, திருமணம் செய்துகொள்ளும் இளைஞர்கள் தாங்களே வரதட்சிணை தேவையில்லை என்று கூறும் அளவுக்கு நிலைமை உருவாக வேண்டும் என்றும், சட்டங்களை இயற்றிவைத்து விடுவதால் மட்டுமே சமுதாயத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற இந்தத் தீய பழக்கத்தை ஒழித்துக்கட்ட முடியாது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், பெண்களைப் பெற்ற தாய்மார்கள், தங்கள் பெண்களை 'வரதட்சிணை' கேட்கும் இளைஞருக்கு மணம் செய்து கொடுக்கக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த மத்தியப் பிரதேச முன்னாள் கவர்னர் மங்கள்தாஸ்...

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 11—6—'56 திங்கள்

இது என்ன வாதம்?

வரவிருக்கும் பொதுத் தேர்தலில் நமது முன்னேற்றக் கழகம் கலந்து கொள்வதா, கூடாதா என்பதில் முடிவு கட்டும் பொறுப்பை, மாநில மாநாட்டிற்கு வந்த மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மக்களும் தங்களுடைய கருத்தைத் திட்டவட்டமாக அறிவித்து விட்டனர்.

தேர்தலில் பங்குகொண்டு சட்டசபையைக் கைப்பற்றுவது அல்லது அங்கு சில இடங்களைப் பெறுவது; அதனுல் உருவாகும் புதிய பலத்தை திராவிட நாடு வெற்றிக்குப் பயன்படுத்துவது என்றக் கருத்தில்தான், தேர்தலில் பங்குகொள்ள கழகத்தைப் பணித்துள்ளனர் மக்கள். அந்த ஒன்றைத் தவிர்த்து, மக்களின் முடிவிற்கு வேறு பொருள் கூறுவதற்கில்லை.

நமது முன்னேற்றக் கழகம் தேர்தலில் கலந்து கொள்ள முன்வந்ததற்கு முழுதும் பொறுப்பேற்க வேண்டியவர்கள் மக்களே யாவர். அப்பொறுப்பை கழகக் காவலர்கள் மீது சுமத்துவதற்குத் துளியும் நியாயமே கிடையாது.

கழகம் தேர்தலில் கண்டிப்பாகக் கலந்துகொள்ள வேண்டும் என்பது கழகக் காவலர்களின் சில பலருடைய கருத்தாக இருந்திருக்குமானுல், அப்பிரச்சினை குறித்து கழகச் செயற் குழு முன்னரே ஆராய்ந்து இருக்கும். அதைத் தொடர்ந்து கழகப் பொதுக் குழுவும் அப்பிரச்சினை மீது சாதகமான அல்லது பாதகமான முடிவிற்கு முன்கூட்டியே வந்திருக்கும்.

ஆனுல் கழகக் காவலர்களோ, மேற்குறித்த இரண்டு வகையிலும் முயற்சிக்காமல், பிரச்சினையில் முடிவுகட்டும் உரிமையை, அவ்வுரிமையை இயல்பாகப் பெறறுள்ள பொது மக்களிடமே விட்டுவிட்டனர். அதன் மூலம், தேர்தலில் பங்கு கொள்வதில் தங்களுக்கெனத தனியானப் பற்று எதுவும் கிடையாது என்ற உண்மையை கழகக் காவலர்கள் விளக்காட்டியுள்ளார்கள்.

உண்மை இவ்வாறு இருக்க, கழகக் காவலர்களின் பதவிப் பித்தமதான், தேர்தலில் கலந்து கொள்ள வேண்டும் என்ற முடிவிற்குக் காரணம் எனச் சில அரசியல் அம்மாஞ்சிகள் தூற்றி வருகின்றன. அதுகள் தினசரி சுமத்திவரும் எத்தனையோ அபவாதங்களில் இதுவும் ஒன்றுகும். கழகம் தேர்தலில் கலந்து கொள்வது என்ற முடிவு கேட்டு சிலர், இப்பொழுதுதான் நமது கழகம அரசியல் கட்சியாக உருவெடுத்து இருக்கிறது. எனப் பேசத் தொடங்கியுள்ளனர். இதுவரையில் நமது கழகம ஒரு அரசியல் கட்சியாக இயங்கி வரவில்லை என்பது அவர்களுடைய சித்தாந்தம. அவர்கள கருத்து தவறுனது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியது நமது நீங்காக் கடமையாகிறது. அத்தகைய தவறுன கருத்துடையோர் உண்மை அறிய, காங்கிரஸ் கட்சியின் வரலாற்றை ஒரு முறை கற்கவேண்டும். அதன் பிறகு, தங்கள் கருத்துத் தவறுனது என்ற முடிவிற்குத் தாங்களே வந்துவிடுவர்.

1885-ம் ஆண்டில் காங்கிரஸ் துவங்கப்பட்டது. வெள்ளையர்களுடன் எல்லாத் துறைகளிலும் சமஉரிமை பெறுவது என்ற ஒரே நோக்குடன் துவங்கிய காங்கிரஸ் கட்சி, நாட்டு விடுதலையைக் கோரும் அரசியல் விடுதலை இயக்கமாகப் பின்னர் மாறியது.

1907-ம் ஆண்டில் காங்கிரசிற்குள்ளாக மிதவாதிகளுக்கும் அமிதவாதிகளுக்கும் பிணக்கு ஏற்பட்டது. அந்தப் பிணக்கு பத்து ஆண்டுக் காலம் நீடித்து 1919-ம் ஆண்டில் மிதவாதிகள் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறினதுடன் முடிவடைந்தது.

அதற்கு அடுத்த ஆண்டில் காங்கிரஸ் கட்சிக்குள் காந்தியார் நுழைந்தார். அது முதல் காங்கிரஸ், காந்தியார் இறக்குமவரை, அவருடைய அரவணைப்பில் வளர்ந்தது.

காங்கிரசிற்குள் காந்தியார் நுழைந்த ஓராண்டுக் காலத்திற்குப் பின்னர்தான், அதாவது 1921-ம் ஆண்டில்தான் நான்கணு உறுப்பினரை சேர்க்கும் முறையை முதல் முதலாக காங்கிரஸ் கைக் கொண்டது.

1923-ம் ஆண்டில் காங்கிரஸ் ஒரு புதிய மாற்றத்தைப் பெற்றது. அந்த ஆண்டில்தான் காங்கிரஸ், சுயராஜ்ய கட்சி என்ற பெயரால் சட்டசபைத் தேர்தல்களில் கலந்து கொண்டது.

சட்டசபைகளைக் கைப்பற்றி இரட்டையாட்சி முறையைத் தகர்ப்பது என்ற உட்கருத்துடன் காங்கிரஸ் சுயராஜ்யக கட்சி தேர்தலில் கலந்து கொள்ள முன்வந்தது.

மீண்டும 1937-ல், சட்டசபையைக் கைப்பற்றுவது என்ற முனைப்புடன், காங்கிரஸ் நேரடியாக தேர்தலில் கலந்து கொண்டது. பெருமபான்மையான மாகாணங்களில் காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றும கொண்டது.

சட்டசபைக்குள் நுழைந்த பிறகுதான் காங்கிரஸ் அரசியல் கட்சியாக மாறியது, அதுவரை அது அரசியல் கட்சியாக இருக்கவில்லை என எடுத்துக் கூறியவர், நாமறிந்தவரையில், இதுவரை எவரும இல்லை. ஆனுல், நமது கழகத்தைப் பொறுத்தவரையிலோ, அது போன்ற மதிப்பீடுகளை, விசித்திரமான கருத்துக்களை வீசி எறிகிருர்கள் சில அரசியல் பேரறிஞர்கள்.

ஒரு விடுதலை இயக்கத்திற்கு விடுபடும் மார்க்கங்களில் ஒன்றுதான் சட்டசபை நுழைவு. இதே உயர்ந்த கருத்தில்தான் நமது கழகமும் தேர்தலில் கலந்து கொள்ள முன்வந்து இருக்கிறது.

இதுதான் உண்மை. இவ்வுண்மையை அறிந்தோ அறியாமலோ சிலர், தேர்தலில் கலந்து கொள்ள முன்வந்தால்தான், தன்னையும் ஒரு அரசியல் கட்சியாக ஆக்கிககொள்ளும் தகுதியை நமது கழகம பெற்று விட்டது என விசித்திர வாதம புரியக் கிளமபியுள்ளனர். அது என்ன வாதமோ?

விவசாயப் பொருள் உற்பத்தி

திட்ட இலட்சியம் குறித்து மத்திய அமைச்சர்

ஆமதாபாத், ஜுன் 8—

விவசாயப் பண்ட உற்பத்தியை இலட்சிய அளவைவிட அதிகமாக்கும் பொருட்டு, அவசியமானுல் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தைவிட இன்னும் அதிக நிதி ஒதுக்கப்படுமென திட்ட அமைச்சர் குல்சாரிலால் நந்தா தெரிவித்திருக்கிருர்.

"தொழிலிலும், விவசாயத்திலும் ஏற்றத்தாழ்வு இன்றி உற்பத்தியைப் பெருக்குவதும், பணவீக்கத்தை தவிர்ப்பதும முக்கிய நோககமாகும். உபரி நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர அதிகத் தொகை செலவாகும்; எனவே, ஏற்கனவே உள்ள நிலங்களில் சாகுபடி தீவிரப்படுத்த முயற்சிக்கப்படும்," என்று அவர் கூறியுள்ளார்.

பொது தேர்தலில் போட்டியிட!

டாக்டர் லோகியாவுடன் ம. சோ. கட்சி அணி அமைக்குமாம்

பாச், மஹாரி, ஜுன் 9—

அடுத்த பொதுத் தேர்தல்களின் போது, டாக்டர் ராமமனேகா லோகியா தலைமையிலுள்ள அகில இந்திய சோஷலிஸ்டு கட்சியுடன் தேர்தல் கூட்டு கொள்வதென மக்கள் சோஷலிஸ்டு கட்சி முடிவு செய்திருககிறது.

காங்கிரஸ் அபேட்சகர்களுடன் தீவிரமாகப் போட்டியிடவே இக் கூட்டு ஏற்பாடு உத்தேசிக்கப்பட்டுள்ளது என ம. சோ. கட்சி பொதுச்செயலாளர் திரிலோக் சிங் தெரிவித்துள்ளார்.

சர்க்கார் ஊழியர்கள்

திருமண வயது எல்லைக் குறைக்கப்படுகிறது

பாட்ன, ஜுன் 8—

பீகார் மாநில சர்க்கார் ஊழியர்கள் திருமணம் செய்துகொள்வதற்கென நிர்ணயம் செய்திருந்த வயது எல்லையை, இரண்டு ஆண்டுகளுக்குத் தற்காலிகமாகக் குறைத்து உத்தரவு ஒன்று பிறப்பித்துள்ளனர் என்று தெரியவருகிறது.

சென்ற ஆண்டு சாககார் பிறப்பித்த ஒரு உத்தரவின்படி: 23 வயது அடையா முன்பு திருமணம் செய்துகொண்டவர்கள் சர்க்கார் ஊழியர்களாகப் பணியாற்ற முடியாது; சர்க்கார் ஊழியததிலிருப்பவாகள் சர்க்காரின முன் அனுமதியின்றி 23 வயதககுள் திருமணம் செய்துகொள்ளக கூடாது—என்று விதிக்கப்பட்டிருந்தது. இப்போது தற்காலிகமாக, இந்த வயது எல்லையை 21 என்று நாணயித்து, உத்தரவு பிறப்பிததுள்ளனா. இந்தச் சலுகை இன்னும இரண்டாண்டுகளுககு மட்டுமே இருககுமாம்.

'ஆயுதப் பரிகரணம்'

வாஷிங்டன், ஜுன் 8—

அமெரிககக் குடியரசுத தலைவா ஐசனேவருக்கு ரஷ்யப் பிரதமர் புலகானின எழுதியுள்ள கடிதத்தில், இராணுவத தளவாடங்களையும், இராணுவச் செலவுகளையும குறைததுவிட ரஷ்யா தீாமானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளாராம்.

தனது போர்ப் படையில் 12-இலட்சம் வீரர்களைக் குறைப்பதென்ற முடிவை முன்னிட்டே இராணுவத் தளவகளையும் குறைக்கத் தீாமானிததுள்ளதாக ரஷ்யா கூறியுளளதாம.

வரலாற்று போதனை கூடாதாம்!

வடமொழி நூலார் வழக்கு அதுதானும்!

விஞ்ஞான அரசியலும் வேண்டாமாம்!

விநோபா பாவேயின் 'மனப்போக்கு' வெளியாகிறது!

"பாடத் திட்டங்களில் வரலாற்றுக்கு முக்கியத்துவமளிக்கப் படக்கூடாது. போர்களையும், கலவரங்களையும் கொண்ட கதைகளுக்கே முக்கிய இடம் அளிக்கப்படுவதால், வரலாறுகளால் நன்மையைவிடத் தீமையே அதிகம் விளைகிறது. இக்காரணத்திஞல்தான் பல்வேறு வகையான இலக்கிய வளங்களைக் கொண்ட வடமொழியில் வரலாற்று நூல்கள் அருகிக் காணப்படுகின்றன,"

என்று, 5—6—56-ல, காஞ்சிபுரம் — சாவோதயபுரத்தில் நடைபெற்ற வழிபாட்டுக் கூட்டமொன்று நடந்து முடிந்த பிறகு ஆச்சாரிய பாவே கூறியுள்ளார்.

"நமது நாட்டிலுள்ள அரசியல் கட்சிப் பிரிவினைகள் நாட்டைச் சீர்குலைத்து வருகின்றன; சாதி வேறுபாடுகள் நமது நாட்டிற்கு எவ்வளவு தீமை புரிந்தனவோ, அதற்கு எந்த விதத்திலும் குறையாத அளவுக் கொடுமையை, கட்சிப் பிரிவினைகள் இப்பொழுது செய்துவருகின்றன; சாதி வேறுபாடுகள் மறைந்து வருகின்றன; ஆனுல், அரசியல் கட்சி வேறுபாடுகளோ நமது சமுதாயப் பொதுவாழ்வில் முக்கிய இடம் பெற்றுவருகின்றன. மேற்கு நாடுகளிடமிருந்து நாம் கற்றுக்கொண்ட அரசியல் விஞ்ஞானமென்பது இத்தகையக் கட்சி வேறுபாடுகளை வளர்க்கக் காரணமாயிருந்து வருகிறது," என்றும் அவர் குறை கூறினர்.

இலங்கை தமிழர் அறப்போருக்கு 'தினமணி' இதழ் தரும் விளக்கம்

★

அக்கிரம ஏற்பாடு

"சிங்களம் ஒன்றையே இலங்கையின் ஆட்சிமொழியாக்குவதற்கான மசோதா இலங்கை பார்லிமெண்டில் வந்தது. இது அந்நாட்டில் வசிக்கும முப்பது இலட்சம் தமிழ் மக்களின் ஜீவாதார உரிமையைப் பறிக்கப் பார்க்கும் அக்கிரம ஏற்பாடு.

அநீதியை உலகறியச் செய்ய......!

"எனவே, அமைதியான முறையில் இதைக் கண்டிக்கும ஆட்சேபத் தீர்மானங்களை தமிழா ஸ்தாபனங்கள் பல தினங்களாக சர்க்காருக்கு அனுப்பி வந்தன. இந்த அநீதியை உலகமறியச் செய்வதற்காகவேண்டி பார்லிமெண்டுக்கு வெளியே தமிழ் எம். பி.க்களும், பிரமுகர்களும ஒரு அமைதியான ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஜனநாயகப் பண்பு

"சிங்கள மொழி மட்டுமே அரசாங்க மொழியாக இருக்க வேண்டும் என்று விருபபுகிறவாகள், தமிழுக்கு சமஅந்தஸ்து வேண்டுமெனக் கேட்பதற்கு அமமொழியாளருக்கு உள்ள உரிமையை அங்கீகரிப்பதுதான் ஜனநாயகப் பண்பு. தமிழுககு உரிமையே கேட்ககூடாது என்று கலாட்டாச் செய்து தாக்குவது வடிகட்டிய பாசிஸ்ட் அககிரமம.

உறுதியாகிவிடும்

"ஜனநாயக உரிமை, கடமைகள் பறிமுதலாகும் மக்களுக்குள்ள ஒரே வழி, சர்க்காருடன் ஒததுழையாமையும், அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு சாதவீக எதிர்ப்பைத் திரட்டுவதுந்தான் என்றநிலை உறுதியாகிவிடும்.

உருவாகவில்லை

"இந்தியா விடுதலையடைந்தால் இலங்கையும் விடுபட்டது. சுதந்திரப் போர் என்னவென்பது சிங்களவருக்குத் தெரியாது. பிறரது உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு நியாயம் தவருமல் நடந்து கொள்ளும்பண்பு இன்னும் உருவாகவில்லை. ஆகையால்தான் அப்பண்புகள் படைத்த தமிழர்கள் தம உரிமையைக் கோரிப் பெறுவதில் சிரமம் இருந்து வருகிறது"

என்ன இலட்சியம்? எவை கொள்கைகள்?

புதுடில்லி, ஜுன் 6—

'தேர்தல்களில் தோலவி ஏற்பட்டு விடுமோ என காங்கிரசார் பயப்படக்கூடாது; நமது இலட்சியங்களும், கொள்கைகளுமே நமக்கு முக்கியம; இவற்றை நாம் எக்காரணத்தை முன்னிட்டும் தியாகம் செய்யக்கூடாது!" என்று, பிரதமர் நேரு டில்லி காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் பேசியபோது கூறியுள்ளாராம்.

330 பேர்களுக்குத் தொழில் பயிற்சியாம்!

தென்பகுதிகளுக்கு மத்திய சர்க்கார் உபகாரச் சம்பளம்

சென்னை, ஜுன் 8—

இந்திய சர்க்கார் கல்வி இலாகா நடைமுறைப் பயிற்சி உபகாரச் சம்பளத் திட்டப்படி, 1956-57-ல் சென்னை, ஆந்திரா, திரு-கொச்சி, மைசூர், ஐதராபாத் ஆகிய மதன பகுதியைச் சேர்ந்த சுமார் 330 மாணவர்கள் பயன் பெறுவாாகளாம.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுககு மின்சாரம், டெலிபோன், தந்தி, இரசாயனம ஆகிய எஞ்சினீயரின் துறைகளிலும, தோல, துணித தொழில நுட்பத் துறைகளிலும பயிறசி அளிககப்படும. பயிறசி அளிபபதற்கான வசதிகள் செய்து தர, தெனபகுதியிலுள்ள 40 தொழில் நிறுவனங்கள முன வந்துள்ளன.

இந்த ஆண்டில் 213 பட்டதாரிகளுக்கும, 118 'டிப்ளமா'தாரர்களுக்கும பயிறசி அளிககமுடியும் என்று எதிாபாாககப்படுகிறது பயிறசி ஓராணடு நடக்கும். பட்டதாரிகளுக்கு மாதமொனறுக்கு ரூ. 150-ம, 'டிப்ளமா'தாராகளுக்கு ரூ. 100-ம் உபகாரச் சம்பளமாகக் கிடைக்கும்.

தேசீய மாணவர் படை

ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் நிறுவ எண்ணமாம்!

பெங்களூர், ஜுன் 8—

ஒவ்வொரு கல்லூரியிலும் ஒரு தேசீய மாணவர் படையும், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒரு துணைப் படையும் நிறுவ எண்ணியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் கட்சு கூறியுள்ளார்.

செய்திச் சுருள்

★

தி. மு. கழக பகுத்தறிவு விவசாய மன்றம்

துவக்க விழாக் கூட்டத்தில் எம். ஜி. இராமச்சந்திரன்

மதுரை மாவட்டம் மாரணிவாரியேந்தல் கிராமத்தில் 1—6—56 மாலை 6-30 மணிக்கு மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். முத்து தலைமையில் தி. மு கழக பகுத்தறிவு விவசாய மன்றத் துவக்க விழா நடைபெற்றது. தி. மு. கழகக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது. தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர் அ. பொன்னம்பலனார் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கட்கு 'நடிப்புக் கலை தளபதி' என்ற விருதை—பட்டத்தைத் தலைவர் வழங்கினர்.

தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் விவசாயிகள் முன்னேற்ற பகுத்தறிவுக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் குறித்தும் பேசி நன்றியறிவித்தார்.

தலைவர் முடிவுரைக்குப் பின், தோழர் ஏழுமலை நன்றி கூறினர். யாவருக்கும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு, கைத்தறி துண்டுகள் வழங்கப்பட்டன.

சிறுவர்கள் பாடி வாழ்க்கை

3—6—56 காலை சென்னை நகர சிறுவர் சங்கத்தின் சார்பில், ஆவடி 'தோனக் கலா'வில் பாடி வாழ்க்கைக்கென அமைக்கப்பட்டுள்ள இடத்திற்கு 39 மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்து பின்னர் 5—6—56 மாலை சென்னை திரும்பினர்.

ஆவடி 'தோனக் கலா'வில் முதலுதவி செய்வது, ஓலையினால் விசிறி, கிலுகிலுப்பை போன்றவைகள் செய்வது பற்றியும், மற்றும் பல புதிய விளையாட்டுகளும், இன்னிசைகளும் கற்றுத் தரப்பட்டன. மாலை நேரங்களில் மாணவர்கள் சுற்றுப்புற சிற்றூர்களுக்குச் சென்று வந்தனர். செயற்கை ஆழியில் குளித்து, நீந்தி மகிழ்ந்தனர். இரவில் தீ மூட்டி, அதனைச் சுற்றி வளைய உட்கார்ந்துகொண்டு நீதி புகட்டக்கூடிய விளையாட்டுகளை நடித்தும், பார்த்தும் மகிழ்ந்தனர்.

இந்த பாடி வாழ்க்கைக் குழுவிற்கு திரு. பி. பாலகோபால்—தலைவர்; திரு. எஸ். எஸ். ராஜன்—செயலாளர்.

பெயர் சூட்டல்

சென்னை தோழர் கே டி. ராசு அவர்களின் துணைவி தோழியர் பாளையமமாள் அண்மையில ஒரு பெண் குழந்தைக்குத் தாயானார். அம்மகவுக்கு தோழியர் சத்தியவாணிமுத்து, அவர்களால் 'பரிமள செல்வி' எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

அன்பளிப்பு

சென்னை ஆர். லோகநாதன் அண்டு பிரதர்ஸ் ("லாரி டிரான்ஸ்போர்ட்') அவர்கள் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்காக திருச்சி மாநில மாநாட்டில் அளித்த ரூ. 10 பொதுச்செயலாளர் அவர்கள் மூலம் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

பிறப்பு

25—5—56ல், காரைக்குடி தோழர் சி. சிவநேச பாண்டியன அவர்களின் துணைவியார் தோழியர் அம்பிகாபதி அம்மையார் ஆண் மகவு ஒன்றிற்குத் தாயானார் அதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 தோழர் சோம. தியாகராசன் மூலம் அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

சிங்கம்புணரி தமிழ் மன்ற முத்தமிழ் விழா

இத்தமிழ் மன்ற முத்தமிழ் விழா சார்பில் 26—5—56 பிற்பகல் 2 மணிக்கு, திரு. கிருஷ்ண மூர்த்தி தலைமையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. ஊராட்சி மன்றத் தலைவர் திரு வெ. இராமசாமி பரிசுகள் வழங்கினார்.

28—5—56 காலை 10 மணிக்கு, இவ்வூர் நாச்சியப்பா டூரிங் சினிமா தியேட்டரில் தோழர் அ பொன்னம்பலனார் தலைமையில் இயல் நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. திரு து. முத்து ராமலிங்கம் அனைவரையும் வரவேற்று ஆண்டு அறிக்கை வாசித்தார். தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் இரா. சேது, கணேசன், து. நடராசன் ஆகியோர் 'தமிழகம் அன்றும் - இன்றும்', 'நாம்', 'உழைப்பில் கடவுளை கண்ட அறிஞர்' என்ற தலைப்புகளில் பேசினர்.

இரவு 8-30 மணிக்கு, வள்ளுவர் கலையரங்கில், தோழர்கள் அரு அழகப்பன் — இளங்கலைஞன் — வேதய்யா ஆகியோர் இசைவிருந்தளித்தனர்.

10-30 மணிக்கு, தோழர் மு. கருணாநிதி தலைமையில், 'கல் சுமந்த கசடர்' என்ற நாடகத்தை மாணவ - மாணவிகள் சிறப்பாக நடத்தினர். அவர்களுக்குப் பாராட்டும் பரிசுகளும் வழங்கப்பட்டன தோழர் மு. கருணாநிதி நாடகத்தையும், நடிகர்களையும பாராட்டிப் பேசினர். தி. மு முத்து இராமலிங்கம் நன்றி கூறினர்.

திருவத்திபுரத்தில் புத்தர் விழா

5—6—56ல், திருவத்திபுரத்தைச் சேர்ந்த கொடாநகர் தாழ்த்தப்பட்டோரால் புத்தர் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. காலை 10 மணியளவில் தோழர் மு ஆறுமுகம் தலைமையில் ஏழைகளுக்கு கஞ்சி ஊற்றப்பட்டது. தோழர்கள் கோ மு. கண்ணன், இ. சே ஆபேல் ஆகியோர் பேசினர்.

மாலை 6-30 மணியளவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு திரு. மா. இராசு (முதலியார்) தலைமை வகித்தார். தோழர்கள் பி. ஆர். வெங்கிடாத்திரி, ஜி அண்ணாமலை, பி. பாவாடை மூர்த்தி, வனசாட்சி அம்மையார், மா. கந்தசாமி, க. பூ. கண்ணன், சி. இராமசாமி, பு. து. செனார்த்தனன் ஆகியோர் புத்தர் கொள்கை பற்றி விளக்க உரையாற்றினர்.

சென்னை நகர ஸ்டுடியோ தொழிலாளர் மாநாடு

"சென்னை நகர ஸ்டுடியோ தொழிலாளர் முதல் மாநாடு ஜூலை திங்கள் இரண்டாவது வாரத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டு, வரவேற்புக் குழுத் தலைவராக—தோழர் வி. ஜி இராமசாமி; செயலாளர்களாக—எஸ் ஏ. பண்டுரங்கன், செயராமன், குப்தா; பொருளாளராக—டி. கே. சபாபதி; மற்றும் 7 பேர் குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மாநாடு சம்பந்தமான விவரங்கள் வேண்டுவோர், 'தோழர் வி. ஜி. இராமசாமி, வரவேற்புக் குழுத் தலைவர், எண் 39, யுனைடெட் இந்தியா காலனி, கோடம்பாக்கம், சென்னை' என்ற விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்" என, செயலாளரால் அறிவிக்கப்படுகிறது.

அழகிரி நினைவு படிப்பகம்

30—5—56ல் நடைபெற்ற கோவை 29-வது வட்டார அழகிரி நினைவுப் படிப்பகத்தின் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் கண்ணதாசன் அவர்களை அழைத்துப் பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவதென முடிவு செய்யப்பட்டதுடன், மறைந்த அழகிரியின் துணைவியார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

சிறுவர்கள் சங்கத் திறப்பு விழா

2—6—56 மாலை சென்னை பெரம்பூர் பாரக்ஸ் சாலையிலுள்ள 'லேட் மெதடிஸ்ட் மிஷன்' பள்ளியில் நகர சிறுவர்கள் சங்கத் திறப்பு விழா திரு பி. பாலகோபால் தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். எஸ். ராஜன் அனைவரையும் வரவேற்றுப் பேசினர். தோழர் சேரன் திறப்புரையாற்றினர் தோழர்கள் வணங்காமுடி, நாகப்பன், லோகநாதன், துரைசாமி ஆகியோர் சங்கத்தை வாழ்த்திப் பேசினர். தோழர் ஏ. இராமமூர்த்தி நன்றி நவின்றார். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

பாலாற்றில் தண்ணீர் வரக் கோரிக்கை

6—6—56 மாலை வாணியம்பாடியில், வடாற்காடு, செங்கற்பட்டு மாவட்ட விவசாயிகள் சங்கப் பிரதேச நிரந்தரக் குழுக் கூட்டம் தலைவர் திரு. ஆர் சின்னைய (ரெட்டியார்) தலைமையில் கூடி, பாலாற்றுத் தண்ணீர் பிரச்சினைக்காகப் பாடுபட்ட திரு. ஏ. எஸ். அய்யங்கார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், பாலாற்றில் தண்ணீர் வர சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமெனக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

3—6—56 மாலை 6 மணிக்கு, தாராவி - பம்பாய் 'அன்பக'த்தில், மேற்படி மன்ற உறுப்பினர்கள் கூட்டம், தோழர் பி. சாமிநாதன் தலைமையில் நடைபெற்றபோது, மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் பகுத்தறிவு மாநாடு குறித்துச் சில முக்கிய முடிவுகள் செய்யப்பட்டன. மறைந்த அழகிரியின் துணைவியார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. பின்னர், திருச்சியில் நடைபெற்ற தி. மு. க. மாநில மாநாட்டிற்குச் சென்று வந்த தோழர் மா. இரா. ஏ. இரத்தினசாமி, மாநில மாநாடு குறித்து விளக்கிப் பேசினர்.

குன்றத்தூர் முடிதிருத்தும் தொழிலாளர் சங்கம்

6—5—56 காலை 10 மணியளவில் சங்கப் பணிமனையில், குன்றத்தூர் பிர்க்கா முடிதிருத்தும் தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டம் தோழர் தி. பெ. கண்ணப்பா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். சிவானந்தம், சி. ஆர். அமிர்தவாசகம் ஆகியோர்முடி திருத்தத் தொழிலாளர்களின் இழிநிலை குறித்தும் தங்களை ஒதுக்கிவைக்கும் மக்களைப் பற்றியும் விளக்கமாகப் பேசினர்.

சென்னை மாநில முடிதிருத்தும் தொழிலாளர் சங்கத்திற்கு தோழர் என். சிவானந்தத்தை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை வரவேற்றும், குன்றத்தூரில் முடிதிருத்தும் தொழிலாளர்கள் வசித்து வருவதும், சங்கம் இருந்துவருவதுமான வீதிக்கு 'நாவித தெரு' என்றுள்ள—ஜாதியைக் குறிப்பிடும் பெயரை நீக்கி வேறு நல்ல பெயரை வழக்க வேண்டுமென்று குன்றத்தூர் பஞ்சாயத்து போர்டை கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'உலக உல்லாசப் பிரயாணிகள் பல தென்னாட்டிற்கு வருவதே இல்லை'

'போதுமான விளம்பரம் இல்லாததே காரணம்'

வடக்கும்—தெற்கும்பற்றி துணை மந்திரி அழகேசனார்

புதுடில்லி, ஜூன் 8—

"இந்தியாவிற்கு வருகிற உல்லாசப் பிரயாணிகளில் பெரும்பாலோர் தென்னாட்டிற்குச் செல்வதே இல்லை.

"இதற்கு இரு காரணங்கள் உண்டு; ஒன்று, காசி, ஜெய்ப்பூர், ஆக்ராபோன்ற வடநாட்டு நகரங்கள் தொடர்ந்து, நீண்டகாலமாகவே பெரும் விளம்பரம் தரப்பட்டு வந்திருக்கிறது; இது ஒரு காரணம். மற்றொன்று, சர்வதேச விமானப் போக்குவரத்துகள், வடநாடு வழியாகவே செல்கின்றன,"

என்று, 'தென்னாடாவது—வடநாடாவது' என்று இதுகாறும் பேசிவந்த துணை மந்திரி 'ஸாம்' ஓ. வி. அழகேசனார் பேசியிருக்கிறார், புதுடில்லியில்!

"மதுரை, தஞ்சை, மகாபலிபுரம், காஞ்சி, பெரியாறு ஏரி, மைசூர் முதலிய உல்லாசப் பிரயாணக் கவர்ச்சிமிக்க இடங்கள், தென்னாட்டில் பல உண்டு; உல்லாசப் பிரயாணிகளுக்கான போக்குவரத்து முதலிய வசதிகளைத் தகுந்த முறையில் அந்த இடங்களுக்குச் சர்க்கார் செய்து தருவார்களேயானால் நன்றாயிருக்கும்." என்றும் அவர் பேசினாராம்.

வகுப்புவாத இயக்கங்களுக்கு எதிராக முன்னணி?

கம்யூனிஸ்டு கட்சி வேண்டுகோள்

புதுடில்லி, ஜூன் 8—

மாநிலம், மொழி, எழுத்து ஆகியவைகளின் பேரில் வகுப்புவாதத்தைத் தூண்டிவிடும் மகாபஞ்சாப் சமிதி, சனசங்கம் முதலியவற்றினை எதிர்க்க, மக்களின் ஐக்கியத்திற்காகப் பாடுபடும் சனநாயகக் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டுமென்று இந்திய பொதுவுடைமைக் கட்சியின் மத்திய செயற்குழு அறிக்கை விடுத்துள்ளது.

உத்தேச பஞ்சாப் மாநிலப் புனரமைப்பு பற்றி இவ்வறிக்கை குறிப்பிடுகையில், மகாபஞ்சாப் சமிதியும், சனசங்கமும், பஞ்சாபில் வகுப்புவாத உணர்ச்சியையும், வெறுப்பையும் தூண்டிவிடுவது கண்டு பொதுவுடைமைக் கட்சி வருந்துகிறது. மகாபஞ்சாப் கேட்பதன் மூலம் சீக்கியர்களுக்கும்—இந்துக்களுக்குமிடையே வேற்றுமையை ஏற்படுத்தி, இதன் மூலம் சனநாயக வளர்ச்சிக்கு—முக்கியமாக தொழிலாளர், விவசாயிகள் இயக்கங்களின் வளர்ச்சிக்கும், ஐக்கியத்திற்கும் பெருத்த அபாயத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்றும் அவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இரஷ்யாவிற்கு தென்னாட்டு காப்பி

மங்களூர், ஜூன் 8—

முதல் தடவையாக இரஷ்யா, இந்தியாவிலிருந்து காப்பிக் கொட்டை வாங்குகிறது!

இதற்காக ரூ 40 இலட்சம் பெறுமான 6,160 மூட்டை (500 டன்) காப்பிக்கொட்டை இன்று மங்களூரிலிருந்து கொச்சிக்கு புகைவண்டியில் அனுப்பப்பட்டது. கொச்சியிலிருந்து இந்தச் சரக்கை சஷ்யக் கப்பலில் 18-ந் தேதி ஏற்றிக்கொண்டு போகும் என்று தெரியவருகிறது.

விவசாயத் திட்டத்திற்கு மத்திய நிதி உதவி

மாநில சர்க்கார்களுக்குத் தகவல் தரப்படும் நிலை

புதுடில்லி, ஜூன் 8—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 1956—57 ஆண்டில் துவக்கப்படவிருக்கும் விவசாயத் திட்டங்களுக்கு வழங்கப்படும் மத்திய நிதி உதவி இன்னும் மூன்று வாரங்களில் மாநில சர்க்கார்களுக்கு அறிவிக்கப்படுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இராணி மீது வழக்கு!

நஷ்ட ஈடு தருமாறு நீதி மன்ற உத்திரவு

பொல்ஜாரோ, ஜூன் 8—

பிரிட்டிஷ் இராணி எலிசபெத் அவர்கள்மீது வழக்குத் தொடர்ந்தாராம் ஒரு கட்டிடச் சொந்தக்காரர்! கட்டிடச் சொந்தக்காரருக்கு நஷ்டஈடாக 2,40,000 'லயர்'கள் (சுமார் ரூ. 1,900) கொடுக்கும்படி நீதிமன்றம் ஒன்று இராணி எலிசபெத்துக்கு கட்டளை பிறப்பித்துள்ளது எனத் தெரியவருகிறது.

1946-ம் ஆண்டில் பிரிட்டிஷ் கான்சல் என்பார் கட்டிடத்தை வாடகைக்கு அமர்த்தி தங்கியிருந்தாரென்றும், 1952-ம் ஆண்டில் கான்சல் வெளியேறியபோது, கட்டிடம் சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி அதன் உரிமையாளர் நஷ்ட ஈடு கோரினாரென்றும், பிரிட்டிஷ் கான்சல் நஷ்டஈடுதர மறுத்துவிட்டாரென்றும், அதன் பின்னரே கட்டிட உரிமையாளர் பிரிட்டிஷ் இராணிமீது வழக்குத் தொடர்ந்தார் என்றும், நீதிமன்றம் இராணி நஷ்டஈடுதரக் கட்டளையிட்டது எனவும் தெரியவருகிறது.

காதல் முறிவின் எதிரொலி?

பிரஸ்ஸில்ஸ், ஜூன் 8—

இவ்வாண்டு முடிவில் பிரிட்டிஷ் விமானப் படையிலிருந்து விலக முடிவு செய்துவிட்டதாக காப்டன் பீட்டர் டவுன்லெண்ட் இன்று அறிவித்தார். அவருக்குப் பதில் ஒருவர் நியமிக்கப்பட்டதும் விலகுவார்.

காப்டனைத் தான் மணக்கப் போவதில்லையென்று இளவரசி மார்க்கரெட் அறிவித்த பின் விமானப் படைக்கு டவுன்லெண்ட் [illegible] திரும்பினர். "[illegible] விலகியதும் உலக முழுதும் மோட்டாரில் சுற்றி [illegible] வருவேன். [illegible] திரும்பமாட்டேன்" என்றும் [illegible] கூறினாராம்.

'நம் நாடு'

நான்காம் ஆண்டு துவக்கவிழா மலர்

(12 பக்கங்கள்)

★

15—6—56-ந் தேதியன்று நாடெங்கும் கிடைக்கும் விலை அணா 2.

★

அண்ணா, மற்றும், கழக எழுத்தாளர் பலரும் எழுதுகின்றனர்.

ஜனநாயகத்தை எவரும் நம்மீது திணிக்கவில்லை

'அதை நாமாகவே விரும்பி ஏற்று இருக்கிறோம்'

'தத்துவங்களை ஆராய்வதற்கும், கோட்பாடுகளை நிர்ணயிப்பதற்கும் விவாதிக்க முடியாதவர்கள்கூட விவாதிக்கலாம்'

'முடிவு கட்டியான பிறகு ஜனநாயகம் பேசுவது கூடாது'

ஜனநாயகத்திற்கு விளக்கம் தந்த அண்ணா

பொதுச்செயலாளர் பண்பாடு பற்றியும் பாராட்டிக் கூறியுள்ளார்

“ நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள் நம் கழகத்திற்குப் பொதுச்செயலாளராகக் கிடைத்திருக்கிறார்; அவர் இடுகின்ற ஆணைகளை எல்லாம் ஏற்று நடத்துவதில், நான் பெருமை கொள்ளுகிறேன்; நமது தோழர்களும் பெருமை கொள்ள வேண்டும்.

“ அப்படி ஏற்று, கடமைகளைச் செய்வதில், கட்சிக்கு ஊறு ஏற்படும் என்று யாருக்காவது கிலி இருந்தால்—பயமிருந்தால், தாராளமாக அவரிடத்தில் வந்து விவாதிக்கலாம்; எடுத்துக் காட்டலாம்; ஆனால், அந்த வீண் பயத்தைச் சாக்காகக் கொண்டு, 'ஜனநாயகத்தை நாங்கள் நிலைநாட்டுகின்றோம்' என்று யாராவது விவாதங்களில் ஈடுபடுவார்களேயானால், அவர்களுக்கும், பொதுச்செயலாளருக்கும், கழகத் தோழர்களுக்கும் கூறுகின்றேன்—'கடைசி அதிகாரத்தைப் பெற்றிருக்கிற மக்களிடத்தில் அந்த விவாதத்திற்குரிய விவகாரங்களைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டிய ஜனநாயகக் கட்டம் ஏற்படும்; அதற்கெல்லாம் வழிவைத்துக் கொள்ளாமல், அவருடைய பதவிக் காலத்தில், ஜனநாயகத்தை வளர்ப்பதற்கு அவரோடு கலந்து பேசி, நல்ல திட்டங்களை அவருக்கு எடுத்துச் சொல்லி, அவர் தருகின்ற திட்டங்களை ஏற்று, அவர் இடுகின்ற ஆணைகளைத் தலைமேற்கொண்டு, கழகத்தை மேலும் வளர்த்து, பொதுத்தேர்தலிலேயும் நாம் மகத்தான வெற்றி பெருவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி, நாட்டை மீட்பதற்கும், நம்முடைய நல்லாற்றலைப் பயன்படுத்துவதற்கும் நாம் எல்லாம் இந்த மாநில மாநாட்டில் உறுதி பெற்றுக் கொள்வோமாக! சூளுரைத்துக் கொண்டு, மாநில மாநாட்டிலிருந்து கலைந்து செல்வோமாக!

“ நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நாவலரே! கழகத்தைக் கட்டிக் காக்கும் காவலரே! எனது தம்பிமார்களில் மூத்தவரே! கழகத்தைக் கட்டிக் காப்பதற்காக பொதுச்செயலாளராக ஆக்கப்பட்டிருப்பவரே! தலைவரே! 'உம்முடைய ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க நான் என்றும் தயாராக இருக்கின்றேன்' என்பதை எடுத்துச் சொல்வதின் மூலம், மற்ற அத்தனைபேரும் அந்த ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க இருக்கின்றார்கள் என்பதையும் நான் கூறுகின்றேன்.”

என்று, அண்ணா அவர்கள், திருச்சியில் நடைபெற்ற தி மு கழக மாநாட்டில், பேருரை ஆற்றுகையில் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து பேசியதாவது:—

“ நாமெல்லோரும் மனமார ஒன்றுபட்டு, நமது மாநில மாநாட்டிற்குத் தலைவராகவும், நமது கழகப் பொதுச்செயலாளராகவும் தோழர் நெடுஞ்செழியன் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம் நம் நண்பர்கள் பலரும், நெடுஞ்செழியன் அவர்களைப் பலபடப் பாராட்டிப் பேசினார்கள். அவர்கள் கூறிய அத்தனை உண்மைகளையும் நானும் ஏற்றுக்கொண்டேன் என்பதை, நான், அவர்கள் பேசும்போது மகிழ்ந்திருந்ததைக் கண்டவர்கள் அறிந்திருக்கலாம்.

“ நான் இத்தனைக்கும் பிறகு கழகத் தோழர்களை ஒன்று வேண்டிக் கேட்டுக்கொள்வேன்; என்னைவிட நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள் அதிகமான அளவுக்கு அடக்க சுபாவமுடையவர்; எனக்காவது திடீர் திடீரெனக் கோபம் வரும்; ஒரு சமயம் அந்தக் கோபத்திற்குப் பலியாகக் கூடியவர்களும் இருக்கலாம்; சில பேர், அதைப் பரிகாசமாகக் கருதலாம்; சில பேர் 'அண்ணாவுக்கு வேறு யார் பேரிலேயோ ஆசை வந்துவிட்டது; அதனால்தான் நம்மீது கோபமாயிருக்கிறார்,' என்று எண்ணத் தோன்றலாம். நான் சில பேரிடத்தில் கோபப்படுகிறேன் என்றால், அதற்குக் காரணம், அவர்கள் அதனால் நல்வழிக்கு வருவார்கள் என்று எண்ணுகின்ற எண்ணத்தினால் தான்; ஆனால், அந்த அளவுக்குக் கூடக் கோபித்துக்கொள்வது கிடையாது நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள். என்னிடத்தில் உள்ள சில குறைபாடுகள் நீக்கப்பட்டு, புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கத்தை, இன்றையத் தினம் நம்முடைய கழகத்திற்குப் பொதுச்செயலாளராகப் பெற்றிருக்கிறோம்.

“ வருகின்ற கடிதங்களுக்கு நான் பதில் போடுவதில்லை—குறைதான்; ஆனால், அந்தக் குறை வெகுகாலமாக என்னைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறது—அதனால் தான் வைத்துக் கொண்டிருக்கிறேன்; நண்பர் நெடுஞ்செழியனிடத்தில் அந்தக் குறை கிடையாது.

“ குறித்த காலத்தில் கூட்டங்களுக்கு நான் வருவதில்லை; ஆனால், நெடுஞ்செழியனோ, குறித்த காலத்தில் கூட்டம் கூட்டாவிட்டால், கூட்டம் கூட்டுவதாகக் கூறியவர்களுக்குக் 'கொறடா' எடுப்பார். இப்படி என்னிடத்தில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட்ட புடம் போட்டத் தங்கம் நெடுஞ்செழியன்!

“ நான் ஏழெட்டு ஆண்டு காலமாக, கண்ணும் கருத்துமாகப் பார்த்து, எண்ணி எண்ணிச் சிந்தித்து, ஏக்கத்தோடு பார்த்துப் பார்த்து, இருபத்திநான்கு மணிநேரமும் உடனிருந்து—'காரியங்கள் இப்படி இப்படி நடைபெறவேண்டும்—இப்படி இப்படி நடந்தால்தான்நல்லது' என்றெல்லாம்எடுத்துச்சொல்லி இந்த விதைகள் எல்லாம் வளரக் கூடிய நல்லதோர் கழனி அந்த உள்ளத்தில் இருப்பதைக் கண்டு, என்னுடைய பொறுப்பை தோழர் நெடுஞ்செழியனிடம் ஒப்படைத்தேன்.

“ 'என், இதற்குள்ளாக கழகத்தின் பொதுச்செயலாளர் பொறுப்பிலிருந்து விலக வேண்டுமா?'—என்று நண்பர்கள் சிலர் கேட்ட நேரத்தில், 'இல்லை; கழகம் மிக உயரமாக வளரவேண்டும்; நானோ, 4 அடி 6 அங்குலம்; உயரமான ஆளிடத்தில் கழகத்தை ஒப்புவிக்கிறேன்' என்று எடுத்துச் சொன்னேன்.

“ நம் நம்பிக்கை எல்லாம் ஈடேற்றத்தக்க வகையில் பணியாற்றுவதற்கு அவருக்கு ஆற்றல் இருக்கிறது; அந்த ஆற்றல் வளர வேண்டுமானால், கழகத் தோழர்கள் அவருக்குத் தருகிற தொல்லைகள் குறைவாகவும், ஏற்படுத்திக் கொள்ளுகிற தோழமை அதிகமாகவும் இருக்க வேண்டும்.

“ ஏன் தொல்லைகள் குறைவாக இருக்க வேண்டும்? என்றால், இப்போது நான், நமது கட்சிக்குள் இருக்கவேண்டிய ஜனநாயகம் பற்றிச் சிறிது கூறவிரும்புகிறேன்.

“ ஜனநாயகம் என்ற தத்துவத்தை நாம்தான் விரும்பி, அமுல் செய்துவருகிறோம்; எவரும் ஜனநாயகத்தை நம்மிடத்தில் திணிக்கவில்லை. ஜனநாயகம் யாராலாவது திணிக்கப்பட்டிருந்தால், 'அது சரியாக நடக்கிறதா, இல்லையா?' — என்று கண்களில் எண்ணெயை ஊற்றிக் கொண்டு பார்க்கலாம்; கண்பார்வை மங்கியிருப்பவர்களுக்குக்கூட உரிமை இருக்கலாம்—அப்படிப் பார்ப்பதற்கு! ஆனால், ஜனநாயகத்தை நாமாக விரும்பிப் புகுத்திக்கொண்டிருக்கின்றோம்; ஜனநாயகத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்றோம் ஆகவே, அதன் அருமை பெருமைகளும், அதை எப்படிக் கட்டிக் காப்பாற்றவேண்டும் என்பதிலே இருக்கிற பொறுப்பு உணர்ச்சியும் நிச்சயமாக நமக்கு உண்டு; ஆனால், ஜனநாயகம் என்றால், பொதுப்படையான தத்துவங்களை ஆராய்வதற்கும், கொள்கைக்கோட்பாடுகளை நிர்ணயிப்பதற்கும் தாராளமாக விவாதிக்கலாம்.

“ விவாதிக்கத் தெரிந்தவர்கள் மட்டும்தான் என்பது அல்ல; விவாதிக்க முடியாதவர்கள் எல்லாம்கூட விவாதிக்கலாம். ஆனால், விவாதித்து முடிவு கட்டியான பிறகு, நடைமுறை வேலைகளில் பொதுச்செயலாளர் ஈடுபடும் போது, அங்கு போய் ஜனநாயகம் பேசுவது கூடாது.

“ உதாரணத்திற்கு நான் கூறுவேன்—திருச்சியில் மாநாடு நடத்தலாமா வேண்டாமா? இது, அடிப்படைக் கொள்கை; தாராளமாக விவாதிக்கலாம் — 'வேண்டாம்!' என்று ஒருவர்; 'மதுரையில் நடத்தலாம்,'—என்று மற்றொருவர்; 'காரைக்குடியில் நடத்தலாம்,' என்று இன்னொருவர்; இப்படியாக விவாதிக்கலாம்; ஆனால், திருச்சியில் நடத்துவது என்று முடிவு செய்து, இங்குவந்து பந்தல் போட ஆரம்பித்தான பிறகு, இந்தக் கழியை எத்தனை அடி ஆழத்திற்கு இறக்குவது என்பதற்குக்கூட ஜனநாயகம் பேசினால், ஜனநாயகம் மிச்சமாகும்; கழி தங்காது! ஆகையால், அந்தமாதிரித் தொல்லைகளை அவருக்குத் தரவேண்டாம் என்று கூறினேன்.

“எனக்குத் தந்தார்கள்;—அவைகளை நான் தாங்கிக் கொண்டேன், இரண்டு முறைகளில்!

“ ஒன்று — நான், சொல்லப்படும் எல்லா விவகாரங்களையும், கேட்டுக் கொண்டதைப் போன்று பாவனை காட்டுவேன்; பலவற்றைக் கேட்டுக்கொண்டது இல்லை; சில விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பேன்; அவைகளில், மறக்க வேண்டியவற்றை மறந்துவிடுவேன் — செயலாற்ற வேண்டியதை மட்டும் தான் செயலாற்றுவேன். நண்பர் நெடுஞ்செழியன் அப்படி அல்ல; அவர், கல்லூரியில் படித்த காலம் முதற்கொண்டு ஒரு ஒழுங்கு முறை தவறாத மாணவராக இருந்துவந்தவர். ஆகையால், தோழர்கள் சிரமப் பத் தொல்லைகள் தந்தால், அவற்றைத் தாங்கித் தாங்கி வளர்ந்து, 'இவ்வளவு தொல்லைஇருக்கிறதா?' என்று சங்கடப்பட நேரிடும் அவர் சங்கடப்பட நேரிட்டால், அவரிடத்திலிருந்து நாம் பெறக்கூடிய அறிவாற்றலை, முழு அளவுக்கு நம்மாலே பெறமுடியாது

“ நாடக மேடையில்கூட நல்ல பாட்டுப் பாடிக் கொண்டிருக்கையில், இரண்டாவது முறை 'ஒன்ஸ் மோர்' கேட்கிறபொழுது, பாடுகிறவர்களுக்கு எவ்வளவு சங்கடமிருக்கிறது என்று கருதுகிறீர்கள்? சாதாரண நாடக மேடையிலேயே அப்படி இருக்கிறது என்றால், ஒரு பெரிய இயக்கத்தை நடத்திச் செல்லும் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவருக்கு எத்தனை கஷ்டங்கள் இருக்கும் என்று நம்மாலே எண்ணிப் பார்க்கமுடியாதா?

“ தோழர் நெடுஞ்செழியன் எனக்குத் தம்பிதான்—வயதில்! உண்மையில் அவரை நான் தம்பி என்று அமைப்பதில் பெருமைப்படுகின்றேன்! என்னை அண்ணனாகக் கொண்டிருப்பதில் அவரும் பெருமைப்பட்டிருக்கின்றார்! ஆனால், அவர் பொதுச்செயலாளர் பதவியிலிருக்கிற நேரத்தில், அவர் இடுகின்ற ஆணைகள் அத்தனையையும் நான், ஒரு தலைவன் இடுகின்ற ஆணையாக ஏற்று, அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பேன் என்பதை இந்த மாநில மாநாட்டில் நான் உறுதி கூற விரும்புகின்றேன்.

“ அதில் யாருக்காவது, 'அப்படியா? நடப்பாரா? நடக்குமா?'—என்று சந்தேகம் இருந்தால், பெரியார் இராமசாமியைக் கேட்டுப்பாருங்கள்—' இதுவரையும், இனிமேலும் ஒரு தலைவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதில் என்னைவிட வேறு யாரும் உண்டா?'—என்று!

“ உதாரணத்திற்கு நான் ஒன்று கூறவேன்—வடநாட்டில் நான் அவரோடு சுற்றுப்பயணம் செய்தேன்; லக்னோ பல்கலைக் கழகத்தில் பெரியார் இராமசாமி அவர்கள் தமிழில் பேசினார்; நான் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தேன்; மொழிபெயர்த்தான பிறகு, அந்த மாணவர் கூட்டத்தின் தலைவராக இருந்தவர், நான் ஒரு எம் ஏ. படித்தவன் என்பதை அறிந்து, என்னையும் சிறிது நேரம் ஆங்கிலத்திலேயே பேசுமாறு கூறினார்.

“ நான், பெரியார் இராமசாமியைத் திரும்பிப் பார்த்தேன்; 'பேசாதே' என்றார்; 'பேசவில்லை' என்றேன்; மறுபடியும் அவர்கள் வற்புறுத்தினார்கள்—இவரைக் கேட்டேன்—இல்லை; பேசாதே' என்றார் மூன்றாம் முறையாக வலியுறுத்தினார்கள்; மூன்றும் முறை பெரியார் என்னிடம் சொன்னார்—'நான் பேசுவதற்கு வரவில்லை; பெரியாரின் பேச்சை மொழிபெயர்க்கத்தான் வந்திருக்கிறேன் என்று, அவர்களுக்கு எடுத்துச் சொல்லு'—என்றார்; நான் எடுத்துச் சொன்னேன. எதனால்? அவ்வளவு அடக்க ஒடுக்கமாக பெரியாரிடம் நடந்துகொண்டேன். நான்தான் கடைசி ஆள் — அவ்வளவு அடக்க ஒடுக்கமானவன்—அவருக்குக் கிடைத்தவன்!”

விசைத் தறிகள் பதிவு: கட்டாயமாக்க முடிவு

நாட்டிலுள்ள பருத்தி விசைத் தறிகளை சரியாகக் கணக்கெடுக்கும் பொருட்டு, விசைத் தறிகளை பதிவு செய்வதை கட்டாயமாக்க இந்தியப் பேரரசு முடிவுசெய்து விட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில்

அண்ணா

சுற்றுப் பயணம்

★

ஜூன் 14: மாலை—இராமநாதபுரம்
இரவு—பரமக்குடி
„ 15: மாலை—திருவில்லிப்புத்தூர்
இரவு—தளவாய்புரம்
„ 16: மாலை—சாத்தூர்
இரவு—விருதுநகர்
„ 17: —அருப்புக்கோட்டை

அண்ணா அவர்களுடன் தோழர்கள் எம். எஸ். இராமசாமி, முகவை. ஆர். எஸ். பாண்டியன் ஆகியோரும் கலந்து கோள்வர்.

சென்னை நகரில் பாதாளப் பாதைகள்

சென்னை, ஜூன் 8—

சென்னை மவுண்ட் ரோடு, ரவுண்ட் டாணாவுக்குக் கீழே ஒரு 'பாதாளப் பூங்காக் கடை வீதி'யை உண்டாக்கும் எண்ணத்திற்கு சென்னை நகர சபையின் வேலை, நிதிக் குழுக்கள் ஒப்புதல் அளித்துள்ளன.

இத்திட்டம் ரூ 10 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூங்காக் கடைவீதிக்கு மூன்று வழிகள் இருக்கும்; ஒரு வழி—எல்பின்ஸ்டன் தியேட்டர் அருகிலிருந்தும், மற்றொன்று—எலலிஸ் ரோடு அருகே இருந்தும், மூன்றாவது — 'வாலாஜா ரோடு' ஆரம்பத்தில் உள்ள சர்க்கார் எஸ்டேட்டிலிருந்தும் அமைக்கப்படும்.

சுமார் 20 கடைகள் இருக்கும். இப்பாதாளப் பூங்காவின் கடை வீதிக்கு மேலே 20 கார்கள் நிற்க வசதி செய்யப்படும். காரிலிருந்து இறங்கி வருபவர்களுக்கெனத் தனிப் படிக்கட்டுகள் அமைக்கப்படும். தற்போது ரவுண்டாணாவிலுள்ள 'கக்கூஸ்' இடித்துத் தள்ளப்படும்; தகுதியான இடத்தில் வேறு கக்கூசுகள் கட்டப்படும்.

60,000 டன் சிமெண்ட் இந்தியாவிற்கு விற்பதற்கு

பாகிஸ்தான் தயாராம்

புதுடில்லி, ஜூன் 9—

இந்தியாவுக்கு பாகிஸ்தானிலுள்ள 60,000 டன் உபரி சிமெண்டை விற்க, பாகிஸ்தான் அரசு தயாராகயிருப்பதாக காரச்சியிலிருந்து வெளிவந்த செய்தியினை இந்தியப் பேரரசு வரவேற்றுள்ளதாம்.

பாகிஸ்தான் சிமெண்டின் விலை மற்றும் இதர விவரங்கள் மத்திய வர்த்தகத் துறையால் விசாரிக்கப்பட்டு வருகிறதாம். கல்கத்தா பகுதிக்குத்தான் இப்பொழுது சிமெண்ட் தேவைப்படுகிறது எனத் தெரியவருகிறது.

வரதட்சிணை...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்பவர், வரதட்சிணையில் கவனம் உள்ளவர்களுக்குப் பொருத்தமான பரிசுகள்வழங்கலாமெனறும், உதாரணமாக, ஒருவர் ரூ 10,000 வரதட்சிணை பெறறுக்கொண்டாரென்றால் அவருக்கு 'ரூபாய் 10,000' என்ற பட்டம் வழங்கலாம் என்றும் கிண்டலாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.